<u>சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்</u>
<u>OS.No. 1210 / 2022</u>

**வா.சா.1 ரம்யா** **28.11.2023**

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நான் இந்த தாவாவை பாகப்பிரிவினை கேட்டு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துக்கள் எனது கணவருக்கும் எனது கணவரின் சகோதரரான 1-ம் பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்டு கூட்டாக அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தின் புல எண்.68 என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புல வரைபடம் தான் சர்வே எண்.68-க்கான புல வரைபடம் என்றால் சரிதான். புல வரைபடத்தில் கண்டுள்ள 1ஏ பகுதியை நான் அனுபவித்து வருகிறேன். 1பி பகுதியை 1-ம் பிரதிவாதியும் அவரது மனைவியும் அனுபவித்து வருகிறார்கள் என்றால் கூட்டாக அனுபவித்து வருகிறார்கள். முன்பே கிராம நிர்வாக அலுவலர் ஊர் பெரியவர்களை வைத்து சர்வே எண்.68/1ஏ, 1பி என பாகம் பிரிக்கப்பட்டு உட்பிரிவு செய்யப்பட்டு அவரவர் அனுபவித்தில் இருந்து வருகிறது என்று சொன்னால் தவறு. 1சி-ல் கண்ட நிலங்கள் எனது பெயரிலும் 1-ம்பிரதிவாதி பெயரிலும் கூட்டாக இருந்து வருகிறது என்று சொன்னால் சரிதான். 68/1பி க்கு 1-ம் பிரதிவாதியின் மனைவி பெயரில் தனிப்பட்டா உள்ளது என்றால் ஏற்கனவே கூட்டாக இருந்தது. தற்போது என்னிடம் காட்டப்படும் பட்டாவில் தனியாக இருப்பது குறித்து எனக்கு தெரியாது. 68/1ஏ, 1சி யில் கண்ட பூமிகள் எனது கணவர் பெயரிலும் 1-ம் பிரதிவாதி பெயரிலும் கூட்டாக இருந்து வருகிறது என்று சொன்னால் சரிதான். சர்வே எண்.68/1எ, 1பி ஆகிய சொத்துக்கள் கூட்டாக இருந்து பாகம் பிரிக்கப்பட்ட விபரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். எனது கணவர் உயிருடன் இருக்கும் காலத்திலேயே எனது கணவரும் 1-ம் பிரதிவாதியும் 1 ஏக்கர் 76 செண்ட் என்று சரிசமமாக பாக பிரிவினை செய்து கொண்டார்கள் என்றும் ஏற்கனவே பாக பிரிவினை செய்த சொத்துக்களை பொறுத்து மீண்டும் பாகப்பரிவினை கோரி இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளதால் நான் கேட்ட பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் தவறு. ஏற்கனவே பாகம் பிரிக்கப்பட்டுள்ளது என்றும் அதை மறைப்பதற்கு தான் எனது தரப்பில் பட்டா புல வரைபடங்கள் வேண்டுமென்றே தாக்கல் செய்யாமல் தவிர்த்து வருகிறேன் என்று சொன்னால் தவறு. 68/1சி என்பது எனக்கும் 1-ம் பிரதிவாதிக்கு கூட்டாக பாத்தியப்பட்ட பூமிகள் என்றும் அதனால் தான் அது கூட்டுப்பட்டாவாக இருந்து வருகிறது என்றும் சொன்னால் அது தவறு. 68/1-ல் கண்ட பூமியில் தான் நான் வீடுகட்டி குடியிருந்து வருகிறேன் என்று சொன்னால் தவறு.

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNDG190041502022/truecopy/order-3.pdf

எனது நிலத்திற்கு கிழக்கே ஒரு வீடு உள்ளது என்றால் ஒரு வீடு உள்ளது. ஆனால் அது இருவருக்கும் பொதுவாக உள்ளது. 68/1பி என்பது 1-ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு 2-ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றும் அதன் காரணமாக தான் வருவாய் துறை ஆவணங்களில் 2-ம் பிரதிவாதி பெயர் சேர்க்கப்பட்டது என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. 68/1பி-ல் ஆளுக்கு பாதியில் நாங்கள் விவசாயம் செய்து வருகிறோம். அதை வைத்து அவர்கள் பட்டா வாங்கியிருப்பார்கள். ஆளுக்கு பாதி சொத்தை அனுபவித்து வருகிறோம் என்று சொல்வது வாய்கலார் பாக பிரிவிலும் செட்டில்மெண்ட் படியும் அவரவர் அனுபவித்து வருகிறோம் என்று சொல்வது சொத்துக்களில் ஏற்கனவே பாகப்பிரிவினை நடைபெற்றது உறுதிபடுத்துகிறது என்று சொன்னால் தவறு. பாகப்பிரிவினை நடைபெறவில்லை. எனக்கும் எனது கணவருக்கும் இடையே நடைபெற்ற திருமணம் பெரியவர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம் என்றால் சரிதான். எனது கணவருக்கு நோய் ஏற்பட்டு அதனால் அவருக்கு உடல்நலம் பாதிக்கப்பட்ட விபரத்தை மறைத்து திருமணம் செய்துவிட்டார்கள் என்று எனது பிராதில் சொல்லியிருப்பது உண்மைக்கு புறம்பானது என்று சொன்னால் சரியல்ல. எனது கணவருக்கு நோய் இருந்ததற்கு அதனை நிரூபணம் செய்வதற்கு நான் எந்தவித மருத்துவ ஆவணங்களையும் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் நான் கொடுத்துள்ளேன். நான் குடியிருக்கும் வீட்டின் மின் இணைப்பு எண்.589 என்று சொன்னால் தவறு. நான் குடியிருக்கும் வீடு பிரதிவாதிகள் குடியிருக்கும் வீடு இரண்டு வீடுகளுக்கும் தனித்தனி மின் இணைப்பு என்றால் சரிதான். எனது கணவருக்கும் எனது கணவரின் சகோதரரான 1-ம் பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்டா வாய்க்கரால் பாகப்பிரிவினை எனக்கு தெரியும் என்றும் அதனை மறைத்து நான் இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் தவறு. எனது கணவர் இறந்தபின்பு அவர் பெயரில் இருந்த 68/1எ ல் கண்ட பட்டாவை எனது பெயருக்கு மாற்றம் செய்யாமல் இருந்து வருகிறேன் என்று சொன்னால் சரிதான். பெரியகரட்டுபட்டி முன்னால் தலைவர் எஸ்.பி.ஆர்.சின்னச்சாமியை எனக்கு தெரியும். காந்தி என்கிற பொம்முராஜ் மகன் பாலசுப்பிரமணி என்பவரையும் தெரியும். அவர்கள் முன்னிலையில் தான் வாய்கரால் பாகப்பிரிவினை ஏற்பட்டு பாகப்பிரிவினை எனது கணவருக்கும் 1-ம் பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்டது என்று சொன்னால் தவறு. அதனால் நான் தாவாவில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் அதனால் எனது தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

M DHANABAL Digitally signed by M DHANABAL Date: 2023.11.28 17:22:07 +0530

சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNDG190041502022/truecopy/order-3.pdf

www.ecourtsindia.com